



ஓலை 167| ஓசை 290| மார்ச் 2026

# அகர முதல இலக்கியப் பேரவை



## பரிதிமாற் கலைஞர்

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

அருவினை என்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின்

## பொருள்

பொருத்தமான கருவிகளுடன் (மனவலிமை மற்றும் திட்டமிடல்), ஏற்ற காலத்தையும் அறிந்து, ஒரு செயலைச் செய்தால், செய்வதற்கு அரிய செயல் என்று உலகில் எதுவுமே இல்லை. அதாவது வெற்றி நிச்சயம்.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

## ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

## வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

## அலுவலக முகவரி


97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.

**அகர முதல இலக்கியப் பேரவை**

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## ஊக்க முடைமை ஆக்கத்திற் கழகு!

பாவகை : நேரசைக் கட்டளைக் கலிப்பா




மின்னல் போலொரு பேர்விறுப் பூக்கமும்
மேகம் போலொரு ஆக்கமும் பேரழ
கென்றும் சிற்றெறும் பின்உழைப் பும்இடி
என்றே தாக்கமும் ஊக்கமும் கொண்டிட
கன்று போலவே துள்ளியே ஓடினால்
கண்ணில் நன்முயற் சிப்பெற என்றுமே
முன்னேற் றம்என ஆக்கமும் ஊக்கமும்
முந்த சீர்வளம் பாரினில் கூடுமே!

செல்வம் சேர்ந்திட சீர்வளம் ஓங்கிட
சீரு ழைப்புமே மேல்வளர் சீர்மரம்
பல்கும் நல்லுழைப் பீந்திடு(ம்) ஊக்கமும்
பாங்காய் ஆக்கமும் பெற்றிட வாழ்விலே
நல்கும் வாழ்வினை நன்முறை தன்னிலே:
நன்கு எண்ணியே நாமுமே பாடுபட்
டில்லை ஓர்சுணக் கம்என மேலுயர்
வெங்கும் வாய்க்கவே எண்ணிட வேண்டுமே!





**இலக்கணக் குறிப்பு:**

கலிப்பா வகைப் பாக்களில் நான்கு கட்டளைக் கலிப்பா பாவகையுமொன்று, இதில் எழுத்தெண்ணிக் கட்டுக்குள் கொண்டு வந்து பாடுவதால் கட்டளைக் கலிப்பா ஆயிற்று. இப்பாவில் நேரசைக் கட்டளைக் கலிப்பா, நிரையசைக் கட்டளைக் கலிப்பா என்று இரண்டு வகை. மேலே இருப்பது நேரசைக் கட்டளைக் கலிப்பா.நேரசையில் தொடங்கும் பாடலில் ஈரசையுடைய எட்டுச் சீர்கள். எண்சீர் மண்டிலம் போல் நான்கு சீர்கள் அரையடியும், உள்ளே மடக்கி அரையடியும் எழுதுதல் வேண்டும். நா அடிகளும் ஒரெதுகைப் பெற்று வரும். அடி தோறும் முதல் சீரும் ஐந்தாம் சீரும் பொழிப்பு மோனைப் பெற்று வரும். நான்கடிகள் எட்டு வரிகளாகும். பெரும்பான்மையாக மா, விளம், விளம், விளம் (தேமா, கூவிளம், கூவிளம், கூவிளம்) என்ற வாய்பாட்டில் அரையடி தோறும் வரும், தேமாவில் நேரசையில் தொடங்குவதால் நேரசைக் கட்டளைக் கலிப்பா ஆயிற்று. அரையடிக்கு மெய்யெழுத்துகளான ஒற்றுகளை நீக்கி எழுதினால் பதினோரு எழுத்துகள் வருதல் வேண்டும். பாட்டு முடியும் போது ஏகாரத்தில் முடியும்.

நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்

அறவழிச் செல்லல்
அரசியல் வெற்றி
அறச்செயல் செய்தே
அமைதியாய் வாழல்
அவச்செய்கை செய்தல்
அழிவினைச் சேர்க்கும்.
அவமறைக்கும் அன்பில்
அலவம் தவறாம்.
பழிதரும் பொய்க்கரி
பண்பில் செயலாம்.
இழிசெயல் செய்திட
இன்னல் விளையும்.
கலைதனைக் கற்றே
களிப்புடன் வாழ்தல்
மலைவளம் நீர்வளம்
மாண்பினைச் சேர்த்தல்
பசியும் பிணியும்
பகையிலா நாட்டில்
வதிதலே என்றும் வனப்பு.




கவிஞர் செ. கலைவாணி

# தீண்டல்

என்
பக்கமிருந்து
வந்த காற்று
உன்னைத் தீண்டாமல்
போனால் போகட்டும்.

உன்
திசையிலிருந்து
வந்த காற்று
என்னைத் தழுவிச்
சென்றதே
எனக்கது போதும்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

நீண்டு கொண்டே போகும் இரவுகள்
நினைவுகளின் பாரங்களைத்
தாங்கும் சுமைதாங்கிகள்
ஏக்கப் பெருமூச்சுக்கள்
ஏகமாய் தவிப்புகள்
உலை மூச்சின் உச்சங்களின்
எழில்களை சிதைத்திடும்
ஏகாதிபத்தியங்கள் எரிந்திடுமோ?
இலவு காத்திடுமோ!?



கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# தமிழா விழி

தமிழா நீயும் பேசிடும் தமிழே
தமிழனே நீவிழி தமிழேதான் வழி
தெள்ளிய மொழியாய் தித்திக்கும் வழியென
அள்ளிய உள்ளமாய் அமுது படைக்குமே

செம்மொழி பிறப்பாய் சிறப்பின் சொல்லாய்
எம்மொழி பிறந்தினும் அனைத்துமே அடுத்ததே
வாழ்வின் துணையாய் வாழ்த்திய உள்ளமாய்
தாழ்வினை நிமிர்த்திடும் தன்னிகரில்லா மொழியே

திரண்ட மனதாய் தித்திக்கும் துளியாய்
கரமாய் காக்கும் கண்ணிய வாழ்விலே
சுமைகள் தீர்த்து சுகமாய் வளர்க்க
இமையாய் காக்கும் இன்பத்தின் அழகே



மொழியை வளர்க்கும் முதன்மைச் செயலாய்
வழியைக் கண்டு வளமும் பெருக்குமே
பிறரது மொழியில் பிரிதொரு நாட்டத்தை
நிறமாய்க் குறைத்து நிம்மதியில் நிலைப்போமே


சொந்தத்தின் உயர்வில் சொர்க்கமாய் கடந்து
பந்தமாய் நிலைக்கும் பகுத்துணர்வு வரமே
தீர்த்தக் கரையினிலே தித்தித்த தேனாய்
வார்த்த வார்த்தையாய் வசந்தம் கொடுக்குமே

சிந்தைப் பெருக்கி சிறப்புற மகிழ்ந்து
வந்தனை செய்யும் வாழ்வில் என்றுமே
எதிர்காலம் என்றும் எழுத்தாய் நிரப்பி
கதிரோன் ஒளியோடே கடமையில் காக்குமே

கவிஞர் பி, அன்பழகன், கடலூர்

கன்னெய் கேணி அறுத்து
தீது இழைத்த வெண் கடுவன்
தணல் பொறி உமிழ்ந்த மணி
வெந்து மடிந்த தளிர்.

போர் வரைந்த காட்சிகள்
விழி நிறைத்த துளிகள்.
மடியும் மாந்த நேயம்
மக்கள் இல்லா உலகு.



கன்னெய்-எரிபொருள்
கடுவன் - குரங்கு
தளிர்- பிள்ளை
தணல்- தெறோச்சி
மணி-குண்டுகள்

கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ்நாடு

# உயிர் தோழா



நீ பெயர் சொல்லாமல் வந்தாய்,
நிழல் போல பக்கத்தில் நின்றாய்
நான் விழுந்த போது
கை காட்டாமல் தாங்கினாய்.

வார்த்தைகள் குறைவு,
பொறுமை நிறைவு;
மௌனத்தில் கூட
உரையாடல் முடிந்தது.

கோபம் வந்த நாளில்
எதிர் கேள்வி கேட்காமல்
என் மூச்சை மட்டும்
கவனித்தாய்.


வெற்றி வந்த பொழுது
முதலில் நீ மறைந்தாய்,
மகிழ்ச்சியை என் கண்ணில்
ஒளித்து வைத்தாய்.

தூரம் வளர்ந்தாலும்
நினைவு குறையவில்லை.
ஒரு திருப்பத்தில் நீ தோன்றுவாய்
பழைய புன்னகையோடு.

கவிஞர் ஏ. எம். முர்ஷிதா பேகம், கண்டி (இலங்கை)

பிறகு பறித்துக்கொள்ளலாம் எனத்
தவிர்த்த பூக்கள்,
அவை உதிர்ந்து போனதோ
அல்லது
உருத்தெரியாமல் அழிந்து போனதோ
என்ற
ஞாபகம் ஒருபோதும்
யாருக்கும் தோன்றுவதில்லை!

அதுபோல்,
சிறகொடிந்த கிளி நான்;
பறக்க முடியாத வானத்தை எண்ணி
வாடுவதை மட்டும்
எப்படி நீ கணக்கில் கொள்வாய்?



கவிஞர் யாழிசைச்செல்வா, தேனி மாவட்டம்

# தண்ணீர்

பசுமை சூறையாடப்பட்ட உலகில்
தண்ணீரின் தாகம்
கானல் நீராய்

வறண்ட கிணறுகள் வறுமையின்
வாசலில் கண்ணீர்
துளிகளாய்


தாராளமாய் கிடைத்த தண்ணீர
இன்று பாட்டிலில் அடைக்கப்பட்ட
பாவங்களாய்

தண்ணீரின் தேடல் நாள்தோறும்
தேடப்படும் தேவைகளாய்
உலகெங்கும்

எட்டாக்கனியான தண்ணீரின் தாகம்
வெயில் காலத்தின்
வேதனைகளாய்

நீர்நிலைகள் எல்லாம் முகங்கள்
தொலைத்து ஆக்கிரமிப்பின்
முகவரிகளாய்

மனிதா நிலத்தடி நீரை
சேமிக்காவிட்டால் எதிர்காலம்
தாகத்தின் ஏக்கங்களாய்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# தமிழ் அன்னை

ஆதி ஆனவள்
அந்தமும் ஆனவள்
எனது பெருமை அவள்
பெருமகிழ்ச்சியும் அவள்
உள்ளத்தில் இனிப்பவள்
உழைப்பினில் சிரிப்பவள்
கருத்தினுள் நிறைபவள்
கற்பனையில் உதிப்பவள்
எண்ணமெல்லாம் நிறைந்தவள்
எதிலும் வெற்றி தருபவள்
கம்பனையும் வள்ளுவனையும் பெற்றவள்
கணக்கிலடங்கா பெருமையினுள் நிற்பவள்
தங்கம் போல் ஜொலிக்கும் தமிழ்த்தாயவள்



கவிஞர் தங்க. பிரியதர்ஷினி, கறம்பக்குடி

(1)
குறை ஒன்றும்
எனக்கு இல்லை கோபாலா
என்னைத் தன்மயமாக்கா
குறை உனதே பூபாலா

(2)
அற்பர் சிறுமையாய்
வெறுப்பின் புரிவார்
பெரியோர் பொறுத்து
செறுத்து அறுப்பார்

(3)
மாதவனைக் காண
தவிக்கும் மனமே
மாதவம் செய்திட
தயங்குவது ஏன் மனமே

(4)
கற்பகத் தரு என்றே
வழித்துணையை நினைத்தேன்
காஞ்சிர தரு ஆனது
முன்னை வினைப்பயன்

(5)
பெருமையாய் நினை
பெற்றதைத் பெரிதாய்
பெறாததை நினைத்து
வருந்தி மாளாதே பெரிதாய்



கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# கங்கையும் காவிரியும்

நாட்டின் புனிதநதி கங்கை;
தமிழகத்தின் உயிர்நதி காவிரி.
வீட்டில் வணங்கப்படுவது
இரண்டுமே!

நதிகள் நம் வாழ்வாதாரம்;
அவற்றின் செழிப்பே வளர்ச்சி.
அவை இல்லையேல்
வாழ்வே இல்லை.

கங்கையைத் தலையில்
தாங்கியவர் சிவனார்;
காவிரியை அகத்தியர்
கமண்டலத்திலிருந்து
கவிழ்த்தவர் விநாயகர்.

கங்கைக்கரை இறப்பில்
மோட்சம் தரும் என்பர்;
காவிரியின் கிளைநதி
குடமுருட்டியும் கூட—
டெல்டாவின் தெய்வங்கள்!

"கங்கை எங்கே போகிறாள்?"
ஐயா ஜெயகாந்தன் நாவல்;
"காவிரி மைந்தன்" எனப் பல
புதினங்கள் புதுமையாக...
கங்கை மைந்தன் பீஷ்மர்,

காவியத்தில் பிதாமகன்.
சப்த தலங்களின் சக்தித் தெய்வங்கள்
கோலோச்சும் இடம் காவிரி.
இரண்டுமே அறிவுக்கும்



அன்பிற்கும், ஆகப்பெரிய
ஆன்மிகத்திற்கும் முக்கிய
ஆணிவேர்கள்.
நாட்டில் செழிப்பு ஏற்பட
வளமான நதிகளைப் பாதுகாப்போம்;

செடிகொடி, கரை மரங்கள்—பாதுகாப்பு!
கனிமவளக் கொள்ளை தடுத்தல்,
தூர்வாருதல் போன்றவையே
நதிகளின் மேன்மையைக் கூட்டி
வளம் பெருக்கும்.

கவிஞர் கி. சுப்பிரமணியன், அடையார்

கான மையலுற மயக்கும்
வேய்ங்குழல் வண்டே நீ!

தேனூறும் சொல் தொடுத்து
உரைத்திடுவாயோ

எம் வடிவுடை நாயகியாம்
புரி குழல்தனை யணிந்த அம்மையிடம்
ஆர்க்கின்ற கடலை மலைதனை
உருவாய் அருவாய் நிறைந்த மனத்துள்
தியாகேசன் திருவடிதனிலும்

நினைத்த தனைத் தவறாமல்
நிலைத்திடவே உரைத்திடுவாயோ

கான மையலுற மயக்கும்
வேய்ங்குழல் வண்டே நீ!



கவிஞர் ஜெயப்பிரபா, சென்னை 81

# நிலவே போய் சொல்!

நிலவும் வானும்தான் கவிஞர்களின்
கவி வரிகளுக்கு உயிர் கொடுப்பவை;
நானோ ஐம்பூதங்களையும் வைத்தே
என் வரிகளுக்கு உயிர் கொடுத்தவள்!


ஆனால், இன்று அந்த ஐம்பூதங்களும்
என்னவனைத் தங்களுக்குள் ஐக்கியமாக்கி,
என்னை அவதிப்பட வைத்தது ஏனோ?
யாம் அறியேன்!

என் நினைவை இழந்து அவர் -
நிலத்தின் மீது விழுந்தது ஏனோ?
காற்றில் அவர் சுவாசம் கலந்தது ஏனோ?
அக்னியில் அவர் சரீரம் உருகியது ஏனோ?
நீரில் ஒருபிடிச் சாம்பலாய்க் கரைந்தது ஏனோ?
வானுலகம் நோக்கிச் சென்றுவிட்டது ஏனோ?

ஐம்பூதங்களை ஆராதித்த எனக்கு, அவை
வலியைத் தந்து வேடிக்கை பார்ப்பது ஏனோ?
நிலவே! நீ மட்டுமே எனக்கு இப்போது
உறுதுணையாய்த் தோழியாய் நிற்கிறாய்.

உன்னிடம் உரைக்கிறேன் என் உணர்வுகளை;
வானுலகில் வலம்வரும் என்னவனிடம் போய்
என் வேதனைகளைக் கூறு!

அவரைப் பார்க்காமல் என் கண்கள்
பசித்திருக்கின்றன என்று சொல்!
தொலைதூரத்தில் அவர் இருப்பதால்
என் நினைவுகள் துவண்டுபோயின என்று சொல்!



ஆறுதல் சொல்ல ஆயிரம் பேர் இருந்தாலும்,
அணைத்து ஆறுதல் கூற அவர் இன்றித்
தினம் தினம் செத்துப் பிறக்கிறேன் என்று சொல்!
நான் சுவாசிக்கும் காற்றே - இன்று
என்னவரின் மூச்சுதான் என்று அவரிடம் சொல்!

பூமாலை சூட்டிய என்னவனுக்கு, இன்று
கண்ணீரால் இந்தப் பாமாலை சூட்டுகிறேன்!

கவிஞர் சுமதி தசரதன், திருவான்மியூர் (சென்னை)

மனம் நொறுங்கி ஆகாயத்தை நோக்கிப்
கண்ணீர் வடித்தேனே!
பதில் சொல்லாமல் இருக்க முடியாமல்
ஆகாயமும் கண்ணீர் சிந்தியது.

ஆனால், என் கண்ணீர்
என் அப்பாவை இழந்த வலியால்;
ஆகாயத்தின் கண்ணீரோ
என் தந்தையைப் பெற்ற பெருமையால்!

ஆகாயம் என் தந்தையைத் தன்னுள்
சேர்த்துக்கொண்டதாலோ என்னவோ.
இன்று என் தந்தையின்றி வாடி நிற்கும்
இந்த வறண்டுபோன பூமிக்கு,
என் கண்ணீர் மருந்தாகிறது!




கவிஞர் தி. உஷா ஜெயசுதா, திருவான்மியூர் (சென்னை)

# பசியின் அத்தாட்சி

தன்னியல்பில் வயிற்றுக்காகப்
போராடி வாழும் சக உயிர்களின்
மதிப்புணர்ந்த மனிதர்கள் நாம்!

இங்கு, தன்னுடைய இருப்பை மீறிச்
சேமித்து, மிகுதியை வீணடித்து,
யாரும் பயனுறாப் பட்சத்தில்
பசியும் பட்டினியும் கொடிது!

உலகின் இயக்கம் தன்னிருப்பில்,
சக உயிர்களின் உணவைத்
தன்னகத்தே நிலை கொண்டது.

யாவருக்கும் வாய்க்கு ஒரு
பச்சிலை படி அளந்து, அது
உண்மையின் பக்கம் நின்றாலும்.

சில இயற்பியல் விதிகளுக்கு
மாறாக, நஞ்சுண்டது.
பசியின் அத்தாட்சியாய்க்
கொன்று கொண்டிருக்கிறது!

அத்தனையும் மோகம்; சாண் பசியில்
பணப்பசி ஈட்டும் நியாயமற்ற,
தன்னிலை மறந்த...

தனக்கு மட்டுமே அனைத்தும் என
நினைக்கும் நீவீர்.



சுவாசக் காற்றின் பசிக்கு ஆளாகும்
மரணத்தின் வாசலில், அந்தத் தூரம்
பசியின் அத்தாட்சியை ஞாபகமூட்டும்!

கவிஞர் வியாத்தன்

# யாதுமாகி நின்றாள் பெண்!





எழுத முடியாத கவிதை—பெண்!
வீழ்த்த முடியாத உறவு—பெண்!
இயற்கை தந்த அற்புதம்—பெண்!
ஐம்பூதங்களின் வடிவமே—பெண்!

அகிலம் போற்றும் அதிசயம் பெண்;
ஆக்கமும் உருவாக்கமும் பெண்!
மேன்மையும் தாய்மையும் பெண்;
அன்பையும் பண்பையும் விதைத்தவள் பெண்!

தன்னிகர் இல்லா தியாகமும் பெண்;
தன்னைத் தானே செதுக்குபவளும் பெண்!
சிற்பியாய்க் குடும்பத்தை வடிப்பவள் பெண்;
சீர்படுத்தித் துயர் களைபவள் பெண்!

கலைகளுக்குத் தலைமகளாய் இருப்பவள் பெண்;
உலகை ஆள்பவளும் பெண்!
ஆற்றலுடன் அற்புதம் செய்பவள் பெண்;
மாற்றங்கள் பல நிகழ்த்துபவளும் பெண்!

தாரமாய், தோழியாய், சகோதரியாய்ப் பெண்;
உறவாய், உயிராய் ஆள்பவளும் பெண்!
புவியிலே புண்ணியம் செய்தவள் பெண்;
சிந்தை எல்லாம் குடும்ப நலனே—பெண்!

ஏற்றம் கண்டிட உழைப்பவள் பெண்;
சோர்வு அண்டாமல் சுறுசுறுப்பாய்ப் பெண்!
கருணை உள்ளம் கொண்டவள் பெண்;
அடிமை விலங்கை உடைத்தவளும் பெண்!

பெண்ணையும் பெண்மையும் போற்றுவோம்;
துணையாய் நின்று காப்போம் நாம்!
தந்நலம் மறந்து சேய்நலம் காப்போம்;
நிகரில்லாத் தனிப்பெரும் உறவை மதிப்போம்!

கவிஞர் ஆதி. சுப. சரவணன், புதுச்சேரி

# ஏர் உழவன்



ஆழ உழுதிடுவோம்
அடிமண்ணைக் கிளறிடுவோம்
வாழும் நுண்ணுயிரியால்
வளம்செய்ய உழுதிடுவோம்.

மாடிரண்டு உடன்பூட்டி
மனிதனவன் ஏர்செலுத்த,
உழுதிடலாம் உன் நிலத்தை;
உயர்த்திடலாம் மண்வளத்தை.

வித்தினை நீ விதைக்க
விளைந்திடுமே உன் பயிர்தான்;
கழிவுகளை உரமாக்கக்
கற்றுக்கொள் அதன் நுட்பம்.

களைப்பயிரைக் களைந்தாலே
உன் பயிர்தான் மேல்வளரும்;
கால்நடைக் கழிவெல்லாம்
காசில்லா உரமாகும்.

பூச்சியினத் தாக்குதலால்
பூச்சிமருந்து நீ தெளிப்பாய்;
பூச்சிகள் அழிவதுபோல்
மண்ணெல்லாம் மலடாகும்.

நன்னெறி விவசாயம் - அது
நல்லதொரு விவசாயம்;
இயற்கை விவசாயம் - அது
இனிமைதரும் விவசாயம்.

மகத்தான மழைநீரை
மறுபயன்தான் தந்திடுமே;
மறுக்காமல் சேமிப்பாய்
மழைநீரை அனுதினமே.

செயற்கை உரப் பயனலே
இயற்கை உயிர்தான் மடியும்;
மறந்தும் செயற்கை உரம்
மறுக்காமல் தவிர்த்திடுவீர்.

உயிர்உரம் இட்டாலே
உன் உயிரும் உறுதிபடும்;
உலகத்து மக்களெல்லாம்
உயிர்வாழத் துணைபுரிவாய்.

உணவுதரும் உழவர்கள்
உழைப்பாளி ஆவார்கள்;
உணவிடையே நஞ்சுதனை
உடனடியாய் நீக்கிடுவீர்.

உலகமெனும் கோவிலிலே
உழவன்கூட இறைவன்தான்;
உலகமக்கள் காப்பதுதான்
உழவனவன் தலைவிதியே.

கவிஞர் முனைவர் ரவி சீனுவாசன் (எ) பகலவன்

# குழையும் அனிச்சமே கூறடி காதலை



செக்கச் சிவந்தவளே!
செம்பருத்தி மேனியாளே!
பூவிதழ் அதரத்தவளே!
பூங்கொடியான இடையாளே!

சிந்திடும் புன்னகையாலே
சிதறுதடி என்னிதயம்;
அன்னத்தின் மென்மையே!
அன்பான பெண்மையே!

கனிவான பார்வையில்
கவர்ந்திட்ட காரிகையே;
என்னுள்ளத்தில் ஆசைகளை
எண்ணத்தால் வளர்த்தவளே!

நளினமான நடைதனில்
நாணமும் வந்ததோ?
யௌவன சுந்தரியே!
அசைந்தாடும் கொடி முந்திரியே!


விம்மிடும் அழகினில்
வியப்பானேன் அன்பே;
குழையும் அனிச்சமே
கூறடி உன் காதலை!

மறுக்காதே நீயும்;
மறைக்காதே கண்ணே!
உன்னுள்ளம் தெரியுமடி
என்னினைவுகளில் வாழ்கிறாயென!

உண்மைக் காதல்
என்றும் உதிராதே;
மொட்டது மலர்ந்து
பூவாகச் சிரித்திடுமே!

நறுமணமாய்க் கமழ்ந்திடும்
நங்கையே வந்திடுவாயே!

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்



இருவிழி பார்வையில்
இதயம் தொலைத்து

கருவிழி நடுவில்
காதல் முளைத்து

ஓரவிழி கண்ணசைவில்
உள்ளம் மகிழ்ந்தேன்

தேரடி வீதியில்
தேவதை அவளானாள்.

கவிஞர் ஈ. தவணிதன், பல்லடம்

எல்லோரும் ஒன்றாக இணைந்து
மகிழ்ச்சியாக வேலை பார்க்கிறார்கள்;
அதில் புதியதோர் சவால்களைப்
பற்றி ஆராய்ந்து பேசுகிறார்கள்!

ஒருவருக்குள்ளே எண்ணற்ற எண்ணங்கள்;
பல புதிய முயற்சிகள்!
கேலி கிண்டலுக்குப் பஞ்சமில்லை;
அனுசரித்து விட்டுக்கொடுப்பதன் மூலம்
அன்பைப் பரிமாறிக் கொள்கிறார்கள்!

"கூடி வாழ்ந்தால் கோடி நன்மை"
இதற்கு எடுத்துக்காட்டாய் விளங்குகிறார்கள்!



கவிஞர் மா. மோனிஷா

# அவள் உரிமை – அவள் ஆசை



நிசப்தத்தில் கூட குரல் கொடுக்கும்
அவள் மனசின் சிறிய ஆசைகள்.
சொல்லாமல் வாழ்ந்தாலும்
சொல்ல வேண்டும் என்ற ஏக்கம் உண்டு.

அவள் ஆசை பெரியதில்லை
அவளை யாரோ உணர வேண்டும்,
அவள் மௌனத்திலும் அர்த்தம் காண வேண்டும்,
அவள் சிரிப்பின் பின்னால் இருக்கும்
காயங்களைப் புரிந்துகொள்ள வேண்டும்.

சிறகுகள் இருக்கின்றன அவளுக்கு,
ஆனால் பறக்க அனுமதிதான் தேவை.
தடையில்லாத ஒரு வானம்,
தன்னம்பிக்கை நிறைந்த ஒரு உலகம்.

அவள் தெரிந்த ஆசை—
"நான் நானாகவே வாழ வேண்டும்"
என்று சொல்லும் துணிவுதான்.
அதை யாரும் கெடுக்காதே என்ற எதிர்பார்ப்புதான்.

அவள் ஆசை ஒரு கனவு இல்லை,
அது அவள் உரிமை.
அதை மதிக்கும்போதுதான்
அவள் முழுமையாக மலர்கிறாள்.

கவிஞர் ஸ்ரீவள்ளி, கோவை

அகர முதல

# என் தேடலே... நானே

இரவின் பொழுதிலே,
பேருந்தின் பயணத்தில்,
சன்னல் ஓர இருக்கையில்
அறியாத முகங்களோடு.

நிலவொளி ரசித்தே,
தென்றலின் வருடலில்
இசைத்தட்டின் இசை வரிகளில்.

இதயம் இளகி,
இறகாய் மாறவே
சொல்லாத காயங்கள்
மெதுவாய் மறையவே.

வெகு நேரம்
நெடுந்தூரம்
ஊர்கள் பல கடந்து
தெரியாத தெருக்களில் நடந்து.

புதிய முகங்கள் பார்த்து
இயற்கை அழகில் வியந்து

எல்லையற்ற முடிவைத் தேடி
வான் போலவே நீண்டு
பாதை சொல்லும் வழியே

வெண் முகிலாய் அலைந்து
அமைதியாய் கரைந்தேன்



காணாத என்னைக் காணவே
என்னில் நானே வாழவே
சுற்றமும் பற்றும் துறந்தே
நான் என்னைத் தேடினேன்.

தேடித் தேடியே ஓயாமல்
காற்றாய்... கடலாய்... நிலமாய்...
யாவுமாய் வாழ்ந்து,
துகள் போலத் தொலைந்து.

காணாத என்னைக் கண்டேன்,
என்னில் என்னையே
தொலைத்தேன்.

மீண்டும் திரும்பாத நிலையில்
விரும்பியே தொலைந்து,
பயணமாய்த் தொடர்கிறேன்.

கவிஞர் க. கார்த்திகா மணிகண்டன், கோவை

# கடினமான உழைப்பாளி அப்பா



தலைவனென்றே குடும்பத்தை தோளில் சுமப்பார் ;
தளர்வில்லா உழைப்பினையே நாளும் அளிப்பார் !

நிலையறிந்தே தன்செலவை சுருக்கிக் கொள்வார் ;
நிறைமனத்தில் மனைவிமக்கள் நலமே காப்பார் !

அலைகொண்ட வாழ்வினிலே என்றும் அமைதி ;
ஆளுமையால் நெறிப்படுத்தும் வலிமை துணிவு !


கலைகளிலும் தம்மக்கள் விருப்பம் ஏற்பார் ;
கனவெல்லாம் நனவாக்கக் கடிதே உழைப்பார் !

உலகத்தின் உறவுகளில் முதன்மை இவரே ;
உணர்வுபாசம் வெளிப்படையாய்க் காட்டல் அரிதே !

சலிப்பில்லா போராட்டம் முகத்தில் சிரிப்பு ;
தந்தையரைக் காத்துநிற்றல் பிறவிக் கடனே !

கவிஞர் ஆ ச கந்தன், திருவொற்றியூர் (சென்னை)

# மௌனத்தின் மரணம்



வார்த்தைகளால் கட்டி எழுப்பிய
நமது காதல் கோட்டை
இன்று ஒரு சொல்லும் இல்லாமல்
சரிந்து கிடக்கிறதே மௌனத்தால்!

பேசித் தீர்க்க முடியாத ஆயிரம் ஆசைகளை
நமது கண்கள் பகிர்ந்துகொண்டன.
ஆனால் இன்று அதே கண்கள்,
நீ காட்டும் மௌனத்தைக் கண்டு
கண்ணீரால் பதில் சொல்கின்றன!

"பிரிவோம்" என்று நீ
ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் கூட,
என் மனதை தேற்றியிருப்பேன்.

ஏதும் சொல்லாமல் நீ காட்டிய
அந்தப் பாழ் மௌனம் தான்,
என்னை ஒவ்வொரு நொடியும்
உயிரோடு கொன்று கொண்டிருக்கிறது!

உன் அலைபேசி அழைப்பிற்காக
காத்திருந்த காலங்கள் போய்,
இன்று உன் மௌனத்தின் அர்த்தம் புரியாமல்
தனிமையில் தவிக்கிறேன்.

நீ பேசிய பழைய வார்த்தைகளை
நினைவுகளின் கோப்பையில்
மீண்டும் மீண்டும் பருகிப் பார்க்கிறேன்!

காயங்களை விடக் கொடியது
பதில் இல்லாத உன் மௌனம்.
மரணத்தை விடக் கொடியது
காரணம் தெரியாத இந்தப் பிரிவு!

என்னைத் தண்டிப்பதாக நினைத்து
நீ மௌனம் காக்கிறாய்.
ஆனால் அந்த மௌனம்,
நம் காதலையே பிணமாக்கி
மண்ணுக்குள் புதைத்துக் கொண்டிருக்கிறது!

இனியும் பேச மாட்டாய் எனத் தெரிந்தும்,
உன் மௌனத்தையே மொழியாகக் கொண்டு
வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.
உன் நினைவுகளின் பாரத்தோடு!

கவிஞர் ரா. ஜோதிமணி, தாராபுரம்

# சாதீ

எல்லாச் சாதிகளை சேர்ந்தவர்களும்
தனித்தனியாக வாழ்கிறார்கள்
சமத்துவபுரத்தில்.

புதைக்கவும் வழியின்றி
எரிப்பதற்கும் விறகின்றி
அடக்கம் செய்ய வழி இல்லாமல்
யுகம் யுகமாய் கிடக்கிறது
சமுதாயக் கூட்டுக்குள்
சாதி என்னும் பிணம்.

பாரெங்கும் பரவிக் கிடக்கிறது
சாதி என்னும் அழுக்கு.
சீருடையில் மட்டும்
எப்படி வரும் சமத்துவம் ?

செத்த ஆடுகளையும்
செத்த கோழிகளையும்
வாங்குவதற்காக அனைத்து சாதிக்காரர்களும்
ஒற்றுமையாக
வரிசையாக நின்றார்கள்
இறைச்சிக்கடையில்.

சாதியை அழித்தார்கள்
சாதியை ஒழித்தார்கள்
தன் சாதியின் பெருமையைக் கொண்டு
பிறசாதியைக் கொன்று.


பிணத்தை புதைக்க இடம்
வேண்டும் என்று போராடியவர்கள்
பிணமாகி கிடந்தார்கள்
தீண்டாமைப் பாதையில்
சாதி என்னும் அரவம் தீண்டி.




கவிஞர் முனைவர். அ. சீ. மு. முனியாண்டி, திருவில்லிபுத்தூர்

# எச்சரிக்கை செய்வோம்

எச்சரிக்கை செய்யும்
விதிகளை கவனிப்போம்
எதிர்கால வாழ்வில்
சதிகளைக் களைவோம்
உண்ணும் உணவில் வேண்டும்
அளவே
உறக்க நெறியில்
மிகுதி அழிவே
உடலின் நலமும்,
உள்ளமும் காப்போம்
நாசமிடும் நபர்களுக்கு
செய்வோம் எச்சரிக்கை
ஆதரவற்ற அரும்புகளுக்கு
வாழ்வளிப்போம்
பழிக்குப்பழி
பலியான பிஞ்சுகள்
போரை நிறுத்த
செய்வோம் எச்சரிக்கை
வீண் விரயம்.
செய்யாதிருக்க
பெண்ணடிமை
வளராதிருக்க
வன்முறை அழிய
செய்வோம் எச்சரிக்கை.



கவிஞர் ரெஜினாபானு, பரமக்குடி

பரந்துபட்ட உலகத்தில், குடத்திலிட்ட
விளக்காய் வாழ்ந்த காலம் மலையேறிப் போச்சு!
உலகத்து அதிசயங்களை நொடியினில் தரிசித்திடும்
அதிசயத்தின் உச்சமே விஞ்ஞானத்தின் வளர்ச்சி!

அறிவியல் வளர்ச்சியில் அத்தனையும் சாத்தியமாய்
கனவுகள் மெய்ப்படும் காலமும் வந்ததே!
உள்ளங்கையில் உலகமெனக் காலம் சுருங்கிப்போச்சு...
அறிவியல் வளர்ச்சியென வாய்க்கிழியப் பேச்சு!



ஆனாலும்
சுயநலமே மனிதனின் குணமாகிப் போச்சு!
சேற்றிலே மல்லுக்கட்டி நாளெல்லாம் போராடி,
உயிர்த்தொழிலாம் உழவுதனை உயிராய்க் கொண்ட
விவசாயியின் நிலை மாறவில்லை; வாழ்வும் உயரவில்லை!

விளைவித்த பொருளுக்கு விலைவைக்கும் அதிகாரம்
இல்லாத கொடுமைதான் விவசாயி வாழ்க்கை!
விஞ்ஞான வளர்ச்சி, அறிவியல் முன்னேற்றம்,
வல்லரசு நாடென்ற வாய்ஜால வித்தைகள் தூர்ந்துபோகட்டும்!

உணவு படைக்கும் உயிர்த்தொழிலாம்
"உழவும் உழவனும்" மேம்படும் காலமே
உண்மையான வளர்ச்சி!
அப்போதே உயரும் நம் தேசமே!


கவிஞர் ஜேபி@பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு



நிகழ்ந்த இனிமையான நினைவுகள்
நெஞ்சகத்தில் நீங்காது
என்றும் நிலைத்திருக்க!
நீ வரைந்த கவிதைகளில்
நித்தமும் அன்பு கரைந்தோட!

கையொப்பமிட்டுத் தந்த
கடிதம் கண்ணுக்கு
நிறைவைத் தருகிறது!
புரட்டிப் பார்க்கும் கையேட்டில்
காதல் வழிந்தோடுகிறது!
கண்ணில் மின்னல் தெறிக்கிறது!

கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

# வாழ்க்கைக் கூத்து

மனம்விட்டுப் பேச
மனம் நினைக்கையில்,
தடையொன்று தனித்துவமாய்
ஏந்தி நிற்கிறது!

ஒரு மடலிடம் பேசுகையில்
கடகடவென வார்த்தைகள்
தூரிகையில் நனைகின்றன.
ஆனாலும் சில ரகசியங்கள்
அப்படியேதான் உள்கிடப்பில்!
உறங்கும் நடிப்பில் நவரசமாய்.

தவிப்பில் தவித்து,
தடங்கலின்றி சில கூற்றுகளை
கோபமாய், தாபமாய், அன்பாய்,
அணைப்பாய் - அனைத்துமாகவும்!

அத்தனையும் கொட்டிய பின்
ஆசுவாசமாய் ஓர் வாசிப்பு!
திருத்தங்கள் என்பதே இல்லை;
அப்படியே அனுப்பு - மனம் பல
ஆலோசனைச் சுழலில்!

விருப்பம், வெறுப்பு... அப்பப்பா!
மனபாரத்தின் வேகத்தை
இலகுவாக்கிய நிமிடங்கள்!




மனசு காற்றைப் போல்
பறந்தது பஞ்சாகி!
சுமைகளின் வலிமையைக்
குறைத்தீர்க்க இது எளிமையோ?
முகவரியற்ற மனவோலையாக
மடித்து வைத்ததும்.

வலிகள் சுருண்டு கொண்டன!
பிணக்கு பின்னுக்குப் போனது!
இன்பம் மட்டும் ஏந்தலில் முதலிடமாகி,
அன்புக்குள் அடைக்கலம் தேடுது.
கடித மொழிகள் கணப்பதே இல்லை!


கவிஞர் சுந்தரி பாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டினம்)

நம்
அனாவசியங்கள்
அகற்றப்படுவதில்
ஆகச்சிறந்தது
நம் கை
உளி மட்டுமே



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்

# நேற்றைய நாள் சொன்ன கதை!



நேற்றைய நாள் சொன்ன கதை
நேரத்திற்காக நாம் காத்திருக்கிறோம்!
மரணம் வருவது எப்போதுமென
யாரிடமும் அது சொல்வதில்லை!

திடீர் ஏற்பாடு; எந்த நேரத்திலும்
எப்படியும் அது வரலாம்!
தேடித்தேடிப் பெறுவதும்,
தேடாமலே பெற்றதுவுமென - எதுவுமே
வரப்போவதில்லை மரணத்தின் நிகழ்வில்!

"உனக்கு நான்" என்பதும்
மாயையாய் ஒழிந்துவிடும்!
"நான்" என்ற அகந்தைப் பதம்
அர்த்தமற்றுப் போகும்!

தர்மம் ஒன்றே மரணத்தின் பின்
தனியே ராஜ்ஜியம் அமைக்கும்!
சொந்த பந்தம் எதுவானாலும்,
சொர்க்கம் காண்பது தர்மத்தின் வாயிலில்தான்!

நீ விதைத்தது எத்தகையது என
உன் மரணத்தின் பின் சான்றுகள் கூறும்!
இயற்கை நிகழ்வுகள் காட்டி நிற்கும்
உன் உலக வாழ்வின் உண்மையை!

இன்னமும் புரியவில்லை
எவ்வளவு இருந்தாலும் - இங்கே
ஆன்மா மட்டுமே உயரே போகிறது;
உடம்பு மண்ணுக்காக விடப்படுகிறது!

ஏன்? எதற்கு? - விடை தேடியும்
புலப்படவில்லை ஊனக் கண்களுக்கு!
பாசமும் பற்றும் கொண்ட
மாயையில் நாம் விழுந்து விட்டதாலோ?

இறந்தபின் உடல் மண்ணுக்கு;
உயிர் எங்கே செல்கிறது?
வான்வீடு தேடியா?
எதுவுமே புரிந்திடாப் புதிர்!

மீண்டும் மீண்டும் சுழற்சி
இதுவே நேற்றைய மரணத்தின் கற்றல்!

கவிஞர் திருமதி. ஜுவனீற்றா கிங்ஸ்லி, கல்முனை (இலங்கை)

அழகியல் சுமந்த
வாழ்வில்
அழகாய்
வழி நடத்தட்டும்
அமைதியும்
நம்பிக்கையும்



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# எதிர்காலம் பதில் சொல்லும்!



பேனாவைக் கொண்டு பெருங்கதை
ஒன்றை நான் வடித்தேன்!
வலியும் வேதனையும்
வரிகளாய் வந்தன!

இருநூறு ஆண்டுகள் வாழ்ந்த இடமும்
இன்றும் எனக்குச் சொந்தமில்லை என்கின்றான்!
சோகமும் சோதனையும்
சூழ்ச்சியால் வந்தவையே!

போராடிப் போராடிப் பெற்றது என்ன?
பிச்சைப் பிச்சையாய் வந்த சம்பளம்தானா?
காணியும் வீடும் இன்னமும்
கனவாகவே உள்ளதே!

வாக்கு வாங்கும் போது நாக்கினால் நயக்கின்றான்!
வாங்கி முடித்ததும் எட்டித் தள்ளிச் செல்கின்றான்!
"ஊரான் வீட்டுப் பிள்ளை" என்றா
உதறிவிடப் பார்க்கின்றாய்?
உழைத்துக் கொடுத்து நாங்கள்தானே
பொருளாதாரம் வளர்க்கின்றோம்!

போராடிப் பார்த்துவிட்டோம்;
அடிமைத்தனம் பார்த்துவிட்டோம்!
அதிகாரம் பார்த்துவிட்டோம்;
அறியாமையில்தான் அதிலே
அடங்கியே இருந்துவிட்டோம்!

இப்போது...
பேனையை ஏந்திக்கொண்டு
அறிவுப் புரட்சி செய்கின்றோம்!
கண்ட வலிகளுக்குக் கண்டிப்பாக
எதிர்காலம் பதில் சொல்லும்!

கவிஞர் வி. சிவப்பிரசாத்

# கூடற்ற பறவை

எல்லைகளற்ற வெளியில் ஏகாந்தமாய் பறக்கும்!
வலிகளைப் புதைத்து வளியைத் துணைக்கழைக்கும்!
இலைகளின் மடிதேடி இரவில் உறங்கிடும்!
கிளைகள் கைகுலுக்கி வழியனுப்ப, கதிரவனின்
ஒளிக்கதிர்கள் வழிகாட்ட , சிறகடிக்கத் தொடங்கும்
நாள்தோறும் பயணிக்கும் கூடற்ற பறவை!
காலத்தின் சவால்கள், வேடனின் அம்புகள்
பலப்பல துன்பங்கள் எதற்கும் அஞ்சாமல்
அலைந்து திரிந்திடும் பரந்த வெளிதனில்!
நிலவொளி இரவினிலே நிம்மதியைத் தந்தருளும்!
கூடற்ற பறவைக்கு காலமே துணையோ?
உடலில் உடனிருக்கும் சிறகுகளை மட்டுமே
உற்ற துணையென நம்பிடுதே அப்பறவை!
தனிமை அதற்கு வலிமையைச் சேர்த்திடுதே!
எல்லையற்ற ஆகாயம்! நாளும் புதுப்பயணம்!
உலகையே ஒருகூடாக உணர்கிறதோ இப்பறவை?



கவிஞர் ஸ்ரீ. சீ. சேஷாத்ரீ

# எத்தனை ரகம்!

இறைவனை வணங்குவதில்தான்
எத்தனை வகை.

தினசரியாய் ஒரு பிரார்த்தனை
காரியத்திற்காய் ஒரு பிரார்த்தனை
நன்றிக்காய் ஒரு பிரார்த்தனை
கேட்டது கிடைக்கவில்லை என
மீண்டும் ஒரு பிரார்த்தனை!

வீட்டிலேயே பிரார்த்தனை
தினசரி கோயிலில் பிரார்த்தனை
விசேஷ நாட்களில் மட்டும்
கோயிலில் பிரார்த்தனை!

தனக்காக மட்டும் பிரார்த்தனை
உறவுக்கும் நட்புக்கும் பிரார்த்தனை
சமூகத்திற்கே பிரார்த்தனை!

நேருக்கு நேர் வணங்கிப் பிரார்த்தனை
கண்மூடிப் பிரார்த்தனை
அருகில் யாரும் இல்லையெனில்
சப்தமாய்ப் பிரார்த்தனை!

அருகில் மனிதர் இருக்கையில்
இதழால் தனக்கு மட்டும் கேட்கும்படி
முணுமுணுத்துப் பிரார்த்தனை..




கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

கட்டுரை

மனித வாழ்வு என்பது அனைவருக்கும் பொதுவானது என்றாலும் அது ஒவ்வொரு தனிமனிதனுக்கும் மாறுபடும் ஒரு ரகசியப் பயணம். தோற்றத்திலும், பெயரிலும் மனிதர்களிடையே வேற்றுமை இருப்பது போல, அவர்கள் வாழும் வாழ்க்கையின் அர்த்தங்களும் வெவ்வேறானவை. ஒரு மனிதனின் வாழ்க்கை மற்றவருடன் ஒருபோதும் ஒத்துப்போவதில்லை. இந்த வாழ்வின் சாராம்சத்தைத் தாங்கி நிற்பதுதான் 'இதயத்தின் அகராதி'.

ஒவ்வொரு மனிதனின் இதயமும் ஒவ்வொரு மர்மமான புத்தகம் போன்றது. அதன் அட்டையை அதாவது வெளித் தோற்றத்தை நாம் பார்த்திருக்கலாம், அதன் பெயரை அறிந்திருக்கலாம். ஆனால், அதன் உள்ளே இருக்கும் ரகசியப் பக்கங்களை யாராலும் முழுமையாக வாசித்துவிட முடியாது. எவ்வளவு நெருக்கமான உறவாக இருந்தாலும், ஒரு சிறு ரகசியமாவது சொல்லப்படாமல் அந்த இதயத்தின் ஏதோ ஒரு மூலையில் விடுபட்டிருக்கும். அந்த ரகசியங்களே ஒரு மனிதனை மற்றவர்களிடமிருந்து தனித்துவமாகக் காட்டுகின்றன.



சாதாரண காகித அகராதியை எடுத்துக்கொண்டால், அதில் ஒரு சொல்லுக்கு நிலையான ஒரு கருத்து அல்லது பொருள் இருக்கும். ஆனால், நம் வாழ்வின் அகராதி அப்படியல்ல. எது நமக்கு நிலைக்கும், எது நிலைக்காது என்பதை நம்மால் ஒருபோதும் ஊகிக்க முடியாது. காலத்தின் சுழற்சியில் அர்த்தங்கள் மாறிக்கொண்டே இருக்கின்றன. இளமையில் நம்மால் துடிப்புடன் செய்ய முடிந்த பல விடயங்களை முதுமையின் தளர்வில் செய்ய முடிவதில்லை. உடல் மாறும் போது உள்ளத்தின் தேவைகளும், சொற்களுக்கான அர்த்தங்களும் கூடவே மாறிவிடுகின்றன.

கவிஞர் ரஸ்னீரா ரமீஸான், அக்குறணை (இலங்கை)

கட்டுரை

இந்த அகராதி வெறும் காகிதங்களால் ஆனது அல்ல இது அழிக்க முடியாத காலம் சுமந்து வந்த அனுபவங்களால் ஆனது. பல இதயங்களின் பக்கங்களைப் புரட்டிப் பார்த்தால், அங்கே துரோகங்கள், ஆறாத வடுக்கள், சொல்ல முடியாத வலி மற்றும் வேதனைகள் மறைந்திருக்கும். இந்த பாரத்தை உலகிற்கு காட்ட விரும்பாத பெரும்பாலானோர் பயன்படுத்துவது 'மௌனத்தையும்' 'போலிப் புன்னகையையும்' தான். வெளியே சிரித்துக் கொண்டிருக்கும் பல முகங்களுக்குப் பின்னால், ஒரு பெரிய கண்ணீர் சரித்திரமே ஒளிந்திருக்கலாம்.

உண்மையில், மனித உறவுகளில் பல பிரச்சனைகள் உருவாவதே இந்த மௌனத்தால் தான். தனக்கான ஒரு நம்பிக்கை மிகுந்த உறவு அமையாத வரை ஒரு மனிதன் தனிமையில் காத்திருக்கலாம். ஆனால், ஒரு உறவு கிடைத்த பின்பும், "இதைச் சொன்னால் என்னவாகுமோ? நம் பந்தம் பிரிந்துவிடுமோ?" என்ற பயமே பல உண்மைகளை உறங்கச் செய்கின்றது. இந்தப் பயம்தான் பல இதயங்களை நெருங்க விடாமல் தடுத்து வைக்கிறது. சிறு சிறு ரகசியங்களை அல்லது கூற கூடாத விடயங்களை மறுப்பது நல்லது தான் அதற்காக அனைத்தையும் மறைப்பது அவ்வுறவில் முள் வேலியை கட்டுவது போன்றாகும்.


இதயத்தில் எத்தனை மர்மங்களைக் கொண்டிருந்தாலும், அதைப் பூட்டி வைப்பதில் தீர்வில்லை. சொல்லப்படாத ரகசியங்களும், பகிரப்படாத வலிகளும் இதயத்தின் பாரத்தை அதிகமாக்குமே தவிர குறைக்காது. 'பேசினால் தீராதது ஏதும் இல்லை' என்ற உண்மையை உணர்ந்து, சரியான உறவுகளிடம் மனந்திறந்து பேசும்போது, அந்த மர்மப் புத்தகம் ஒரு தெளிவாக மாறும் பிரச்சணைகள் தீரும். வாழ்வின் அர்த்தம் தேடலில் மௌனத்தை விடப் பேச்சே சிறந்த வழிகாட்டி.

கவிஞர் ரஸ்னா ரமீஸான், அக்குறணை (இலங்கை)

## வாசிப்பு அனுபவம்

**ஏதேன் நகரம் - கவிதைத் தொகுப்பு ; அ.இம்ரான் ஹக் - யாப்பு வெளியீடு - பக்கம் 64 - விலை ரூபாய் 60 ; முதல் பதிப்பு நவம்பர் 2025**

இதயத்தைத் தாக்கும் அக்னிச் சொற்களின் பவனி.




தனது காதலிக்கு நினைவுப் பரிசாக நூலை வழங்கி தனது திருமணத்தன்று அதை வெளியிட்ட தம்பி இம்ரான் அவர்களுக்கு தமிழ் கூறும் நல் உலகத்தின் சார்பில் வரவேற்பு.

சமூக வாழ்வின் துயரத்தையும் அவை எடுத்த இயம்பும் அவலத்தையும் கண்டு கொண்டு அறத்தை துணை கொண்டு கதைகளாகவும் கவிதைகளாகவும் வெளிப்படுத்தும் இம்ரான் அவர்களின் அடுத்த படைப்பு ஏதேன் நகரம்.

அளவெடுத்துத் தைத்த சட்டை ஆளுக்கு அழகை மெருகூட்டுவதைப் போல சொற்களின் குவியலுக்குள் தேர்ந்தெடுத்த சொற்களில் விளையாடும் கவித்துவம் நூல் முழுக்க எதிரொலிக்கிறது. சமகால அரசியல் நிகழ்வுகளையும் அவற்றின் வழியே அனுபவித்த எளிய மக்களின் வாழ்வியலையும் மிகச் சிறந்த சொற்களில் பேசிச் செல்வது பெருவியப்பு.

குடிமக்களின் வாழ்வியலை வளப்படுத்தி மேம்படுத்த துணை நிற்க வேண்டிய அரசியலும் அரசு எந்திரமும் இன்று எப்படி எல்லாம் பாழ்பட்டு நிற்கிறது என்பதையும் அதன் வழியே மக்களின் துயரங்களின் நீளத்தையும் நகைச்சுவையோடும் பகடித்தனத்தில் பதைப்புகளோடும் வெளிப்படுத்தும் இம்ரனின் நம்பிக்கை எல்லா மக்களிடமும் அன்பை விதைக்க வேண்டும் என்பதே.

**கவிஞர் இளையவன் சிவா**

# வாசிப்பு அனுபவம்

பிறப்பும் வாழ்வும் இறப்பும் என மனிதர்கள் பத்தோடு பதினொன்றாக மறைந்து போவதில் எவ்வித அடையாளமும் வெளிப்படப் போவதில்லை. ஒரு சராசரி மனிதனாக தன்னை பூமிக்கு ஒப்படைக்க என்னாமல் எண்ணங்களின் வழியே வாசிப்பவரின் சிந்தைக்குள் ஏதோ ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் மானுடனாக தன்னை அடையாளப்படுத்தும் இம்ரானின் முயற்சியும் பயிற்சியும் புதுப்புது கவிதைச் சொற்களை அவருக்கு உருவாக்கித் தருகின்றன.

"பயணம்

ஏதோ உணர்வின் பொருத்தமின்மையால்
கழன்றவிட்ட
தூக்கத்திற்கு பதிலாக
எதையும் பூட்ட முடிவதில்லை இரவின் பயணத்தில்."

இரவின் பயணம் எப்போதும் எல்லோருக்கும் ஒரே மாதிரியான அனுபவத்தை தந்துவிடப் போவதில்லை இங்கே இரவு இருளையும் குறிக்கிறது எதிர்காலத்தின் மீதான நம்பிக்கையையும் குறிக்கிறது. நினைவுகளின் பயணங்களுக்குள் மனிதன் நடத்தும் ஊர்வலமே வாழ்வின் பெரும்பகுதியை அடைத்துக் கொள்கிறது எனில் இரவுகள் அவனை எப்படியெல்லாம் அலைக்கழிக்கும் என்பதையும் இக்கவிதை வெளிப்படுத்தி விடுகிறது.

"பரபரப்பான விளம்பரத்தின் நடுவே
முப்பது வினாடி இடைவேளை
சுதந்திர தின வாழ்த்துக்கள்"

இக்கவிதையின் வழியாக உண்மையான தேசபக்தனின் மனநிலை வெளிப்படுகிறது. பகடித்தனமும் அதில் ஒளிந்திருக்கும் தேசப்பற்றும் அரசியல்வாதிகளையும் மக்களின் அதீத நுகர்வு கலாச்சாரத்தையும் வெளிப்படுத்தி விடுகிறது.

கவிஞர் இளையவன் சிவா

வாசிப்பு அனுபவம்

*தேர்தல்

கால்கள் வளர்ந்து விட்டன
செருப்பை மாற்றியாக வேண்டும்
ராமன் நாடு
திரும்புகிறான்"

மக்களை அடிமைப்படுத்தும் இன்றைய அரசியல்வாதிகளின் மனநிலையை சாடும் இந்த கவிதை தேர்தலில் போக்கையும் வெளிப்படுத்தி விடுகிறது.

**நந்தனை எரித்த நெருப்பு

புளிய மரத்தின் ஆணிகளில் அவன் நரம்புகள்
உராய்ந்து கிழிகின்றன தண்டவாளங்களில்
ஊரைக் கடக்கும் ரயில்கள் அவன் ரத்தத்தையும்
இழுத்துச் செல்கின்றன
எரியும் அவன் பிண்டத்திலிருந்தே
அரிவாள்கள் காய்ச்சப்பட
அணைக்கப்படாமலேயே இருக்கிறது
இன்னமும் நந்தனை எரித்த நெருப்பு."

சிறுபான்மை மக்களும் ஒடுக்கப்பட்ட சமூகத்தினரும் இன்றைக்கும் விடுதலை வாங்கி 75 ஆண்டுகள் நிறைவடைந்தும் வஞ்சிக்கப்படும் சூழல் நிலவி வருவதை நந்தனை எரித்த நெருப்பு வெளிச்சமிடுகிறது. இனமும் மதமும் சாதியும் எவ்விதமான தாக்கத்தை மனித மனங்களுக்குள் ஏற்படுத்தி இன்னும் அணைக்க முடியாத நெருப்பை பற்ற வைக்கின்றன என்பதை இந்த கவிதை வாசிக்கும் நமக்குள் பெரும் அதிர்வை ஏற்படுத்துகிறது.

கவிஞர் இளையவன் சிவா

**கடவுள்
அறுத்தவைக்கெல்லாம்
அவன் காரணமாகிறான் பொய்த்தவைக்கெல்லாம்
நான் பொறுப்பாளியாகிறேன்"

இங்கே கடவுள் தனது இருப்பை வெளிப்படுத்தும் அதேசமயம் இதை மனிதனுக்கு பொருத்திப் பார்க்கும்போது வெற்றியின் பக்கம் கடவுளையும் தோல்வியின் பக்கம் மனித செயல்பாடுகளையும் ஒப்பிட்டு பார்க்கும் மனநிலை தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

**வீரம்

குகைக்குள்
சுருண்டு கிடக்கின்றன
நரிகள்
ஒழுகும் எச்சிலில்
புலிக்கறி வீச்சம்."


சுருண்டு கிடக்கும் நரிகளுக்குள் இன்னும் புலிக்கறியின் மீதான ஆசை ஒழியவே இல்லை. ஆனாலும் புலிகள் தம்மை உணரும் காலம் வரும்போது குகையின் வாசல் நரிகளுக்கு இல்லாமலேயே போய்விடும் என்பதை காலம் உணர்த்தும்.

**சிரிப்பு
வண்ணமயமாய் மின்னுகிறது
ஆலயங்கள்
இன்னுமா இவர்கள் காணவில்லை
இறைவனை ஏழையின் சிரிப்பில்.

## வாசிப்பு அனுபவம்

ஏழைகளை இன்னும் ஏழைகளாகவே வைத்திருப்பதன் நோக்கமே அரசியல்வாதிகளில் அடிப்படையாக அமைந்துவிடுகிறது பிறகு ஆலயங்களை அடுக்கிக் கொண்டே போனாலும் ஏழைகளின் துயரங்கள் தீரப் போவதில்லை.

இன்றைய மனிதர்களின் வேகமான ஓட்டத்தில் நின்று நிதானித்து எதையும் அனுபவிக்க முடியாத சூழலில் பெருகிவரும் நுகர்வுக் கலாச்சாரமும் மக்களின் அன்றாட முகங்களை மாற்றி விடுகின்றன. பொதுச்சொத்துக்கள் மீதான மக்களின் கவனிப்பின்மை அலட்சியமான மனோபாவம் சகிப்புத்தன்மையை தொலைத்தல் அன்பு கருணை இவற்றை மறந்து விடுதல் போன்ற இன்றைய தலைமுறை செயல்பாடுகளை கோடிட்டு காட்டும் கவிதைகளில் விவசாய மக்களின் போராட்டங்களையும் மேக் இன இந்தியா போன்ற முன்னெடுப்புகளின் செயல்பாடுகளையும் விவரிக்கும் கவிதைகள் இன்னும் உயர்ந்து செழித்து வளர மொழி இவருக்கு வசப்பட்டு துணை நிற்கட்டும்.



## சிறப்பு



(சூலை 6, 1870 - நவம்பர் 2, 1903) ஒரு தமிழறிஞரும், நூலாசிரியரும், தனித்தமிழ் இயக்கத்தில் முதன்மையான பங்கு வகித்தவர்களில் ஒருவரும் ஆவார். இவர் உயரிய செந்தமிழ் நடையில் பேசுவதிலும் எழுதுவதிலும் வல்லவர். நாடகப் புலமை சான்றவர். 'தமிழ் மொழி வரலாறு' போன்ற ஆய்வு நூல்களையும், கலாவதி, ரூபாவதி போன்ற நாடக நூல்களையும், நாடக இலக்கணமான நாடகவியலையும் இயற்றியவர்.

இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் சூரியநாராயணன் என்பது. பின்னாளில் சூரியநாராயண சாஸ்திரியர்[தொடர்பிழந்த இணைப்பு] என்று அழைக்கப்பட்ட இவர், தமிழ் மேல் கொண்ட பற்றினால் தனது பெயரை வடமொழி கலக்காத தூய தமிழில் பரிதிமாற் கலைஞர் என்று மாற்றிக்கொண்டார்.

## வாழ்க்கைக் குறிப்பு


பரிதிமாற் கலைஞர் எனப்படும் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் அவர்கள் மதுரை அருகே விளாச்சேரி ஊராட்சி என்னும் ஊரில் கோவிந்த சிவன், இலட்சுமி அம்மாள் தம்பதியர்க்கு மகனாக பிறந்தார். வடமொழியை தந்தையாரிடமும், தமிழை மதுரை சபாபதி முதலியாரிடமும் கற்றார். இளவயது முதலே தமிழ் மொழியின் மீதும், இலக்கணத்தின் மீதும், இலக்கியத்தின் மீதும் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தவர் பின்னாளில் இளங்கலை பட்டப்படிப்பில்

தமிழ்மொழியிலும், மெய்யியலிலும் மாநிலத்திலேயே முதலாவதாகத் தேறினார். தமிழ்மொழியின் வரலாறு மற்றும் நாடகவியல் (நாடகங்களுக்கான இலக்கணம்) உட்பட பல நூல்களை எழுதினார். கலாவதி (1898), ரூபாவதி என்ற நாடக நூல்களை எழுதி தாமே கலாவதி, ரூபாவதி எனும் பெண் பாத்திரங்களில் நடித்தார். இராவ் பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களால் திராவிட சாஸ்திரி எனச் சிறப்பிக்கப்பட்டார். இது தவிர வடமொழியற்ற நல்ல தமிழ்மொழி வேண்டும் என்பதில் பெரும் முனைப்பு காட்டினார்.

## நூல்கள்

தமிழக அரசு இவரது மரபுரிமையாளர் 19 பேருக்கு ரூபாய் 15 லட்சம் பரிவுத் தொகையாக அளித்து இவரது பதின்மூன்று நூல்களும் 2006 திசம்பர் 2 அன்று தமிழக அரசால் அரசுடமையாக்கப்பட்டன. பரிதிமாற் கலைஞர் பல நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் குறிப்பிடத்தக்க நூல்கள் பின்வருமாறு:

- ரூபாவதி
- கலாவதி
- மான விஜயம்
- தனிப்பாசுரத் தொகை
- பாவலர் விருந்து
- மதிவாணன்
- நாடகவியல்
- தமிழ் வியாசங்கள்
- தமிழ் மொழியின் வரலாறு
- சித்திரக்கவி விளக்கம்
- சூர்ப்ப நகை - புராண நாடகம்



### பதிப்பித்த நூல்கள்

- சயம்கொண்டாரின் கலிங்கத்துப்பரணி (1898)
- மகாலிங்கையர் எழுதிய இலக்கணச்சுருக்கம் (1898)
- புகழேந்திப்புலவரின் நளவெண்பா (1899)
- உத்தரகோச மங்கை மங்களேசுவரி பிள்ளைத்தமிழ் (1901)
- தனிப்பாசுரத்தொகை (1901)

### பரிதிமாற்கலைஞரின் மறைவு

நவம்பர் 2, 1903-இல் பரிதிமாற் கலைஞர் 33 ஆண்டுகளே வாழ்ந்து மறைந்தார்.



# நாளை நமதே

காலம்,

கருத்து,

செயற்பாடு

மூன்றும் ஒன்றிவிடின்

வெற்றியே!

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு
அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு
சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com